**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு ஜீலை மாதம் 23ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

பொருள் எண்.1

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 22.07.2021ம் தேதிய ஆய்வுக் கூட்டத்தில் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் உள்ள மண்சாலைகள், குடிநீர் திட்டப்பணிகள் மற்றும் மழைபோன்ற இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகளை மேம்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சி பகுதியில் உள்ள மேம்படுத்தப்பட வேண்டிய சாலைகளின் விபரம் கணக்கீடு செய்து ரூ. 277.00 இலட்சத்திற்கு கீழ்கண்ட சாலைப் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீல் | அகலம் மீட்டரில் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.02 கற்பகசுந்தரவிநாயகர் கோவில் தெரு விரிவாக்கம் தெற்குத்தெரு மற்றும் வடக்குத்தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்கும் பணிகள் | 0.480 | 4.50 | 50.00 |
| 2. | வார்டு எண்.31 நத்தஹர் பள்ளிவாசல் தெரு மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்கும் பணிகள் | 0.400 | 5.00 | 50.00 |
| 3. | வார்டு எண்.22 மெஹ்ரஜ் நகர் 3–வது தெருவில் (இந்திராநகர்) மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்கும் பணிகள் | 0.320 | 4.50 | 48.00 |
| 4. | வார்டு எண்.02 முப்புடாதியம்மன் கோவில் வடக்குத் தெரு மற்றும் வார்டு எண்.07 வடக்குவாச்செல்வியம்மன் கோவில் தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிகள் | 0.375 | 4.00 | 33.00 |
| 5. | வார்டு எண்.09 பருத்திவிளை வடக்கு தென்வடல் முதல் குறுக்குத்தெரு , கிழமேல் 1–வது குறுக்குத்தெரு , 2–வது குறுக்குத்தெரு , தென்வடல் 2–வது குறுக்குத்தெரு மற்றும் கிழமேல் 3–வது குறுக்குத்தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிகள் | 0.658 | 3.75 | 49.00 |
| 6. | வார்டு எண்.24 கட்டிவிநாயகர் கோவில் தெற்குத்தெரு , வார்டு எண்.22 இந்திராநகர் 3–வது (ம) 4–வது குறுக்குத் தெரு , அன்னைபள்ளிக்கூடம் அருகில் கிழமேல் 1–வது , 2–வது மற்றும் 3–வது குறுக்குத் தெரு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிகள் | 0.642 | 3.75 | 47.00 |
| | மொத்தம் | **2.875** | | **277.00** |

மேற்காணும் விபரப்படி உள்ள சாலைப்பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதிய நிதி நிலைமை இல்லாத காரணத்தினால் முழுதொகையினையும் அரசின் மான்யமாக ஒதுக்கீடு செய்து உரிய நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை சமர்ப்பிக்க மன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண். 3490/2021/இ1)**

**தீர்மான எண். 527**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

கடையநல்லூர் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு டிராக்டர் வாகனம் எண்.TN72U 2038 வாகனத்திற்கு இஞ்சின் பழுதடைந்துவிட்டதால் வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளது. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு ஓவராயிலிங் சர்வீஸ் செய்வதற்கு தனி அலுவலர் அவர்களின் 13.07.2021ம் தேதிய அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2352/ 2021/எச்1)**

**தீர்மான எண். 528**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

கடையநல்லூர் நகராட்சி – இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் .TN76B 1222 டிப்பர் லாரி வாகனத்திற்கு பியேட்கவர் அசெம்பிளி பழுதுகளை நீக்கம் செய்யவும் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அவர்கள் 13.07.2021ம் தேதி அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 13.07.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1. | Moosa Engineering Works,<br>194, Shengottai road,<br>Tenkasi. | ரூ.8800/– |
| 2. | K.P.Oil Centre,<br>407, Anna Silad Roundana,<br>Surandai. | ரூ.9120/– |
| 3. | Natarajan Motor Works,<br>1A, Old Bus stand Road,<br>Tenkasi. | ரூ.9300/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இஞ்சினியரிங் ஓர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி என்பவரின் விலைப்புள்ளியினை ஒப்புக் கொண்டு வாகத்தின் பழுதுகளை நீக்கம் செய்யவும் இதற்கான செலவினம் ரூ.8800/– (ரூபாய் எட்டாயிரத்தி எண்ணூறு மட்டும்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2157/ 2021/எச்1)**

**தீர்மான எண். 529**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சி குத்தகை இனம் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் உரிமம் 2021–2024ம் ஆண்டுக்கு குத்தகை உரிமத்திற்கு பல முறை ஏலம் விடப்பட்டும் ஏலம் எடுக்க யாரும் முன்வராத நிலையில் 01.04.2021 முதல் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. அலுவலகத்தில் தற்போது இருப்பிலுள்ள ரூ.8 மதிப்பிலான 15000 நம்பர் உள்ள ரசீதுகள் முடியும் தருவாயில் உள்ளது. எனவே அவசர தேவையாக உள்ளூரிலுள்ள ‘கிளாசிக் ஆப்செட் அன்கார்டு’ கடையநல்லூர் அச்சகத்தில் 8x100 (வரிசை எண்.1 முதல் 10000 வரை) எண்ணம் அச்சடித்து வழங்கவும் அதற்கான செலவுத்தொகை ரூ.5000/–க்கும் மேலும், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி மேற்கண்ட ரசீது புத்தகங்கள் அச்சடித்து வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4959/ 2020/அ3)**

**தீர்மான எண். 530**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.65 நாள்.28.02.2008 மற்றும் இவ்வலுவலக செயல் முறை ஆணை ந.க.எண்.4003/2017/அ3, நாள்.28.03.2018ன்படி இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள

இருசக்கரவாகன காப்பகத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகளுக்கு திரு.K.M.முகைதீன் பிச்சை 263BA 21/1, ரஹ்மானியபுரம் 9ம் தெரு கடையநல்லூர் என்பவருக்கு உரிமம் வழங்க அனுமதி வழங்கப்பட்டு அன்னார் மேற்கண்ட குத்தகை இனத்தினை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் கோவிட்–19 நோய் தொற்றை தடுப்பதற்காக பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் 24.03.2020 முதல் தமிழ்நாடு முழுவதும் முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதால் பொதுப் பேருந்து சேவையும் நிறுத்தப்பட்டு, மேற்கண்ட குத்தகை இனம் 31.08.2020 வரை முழுமையாக செயல்படவில்லை எனவும் மேற்கண்ட கொரோனா காலத்திற்கு உரிய தொகையினை தள்ளுபடி செய்யக்கேட்டு மேற்கண்ட குத்தகைதாரர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் WP(MD)1378/2021 ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கின் மீது இந்நகராட்சி சார்பில் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடந்து வரும் நிலையில் மேற்கண்ட வழக்கின் மீது மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேரணையின் 10.02.2021ம் தேதிய உத்தரவில் மேற்கண்ட கொரோனா ஊரடங்கு காலமான 01.04.2021 முதல் 31.08.2021 வரை 5 மாதகாலத்திற்கு உரிய தொகையினை இழப்பீடாக சம்மந்தப்பட்ட குத்தகை தாரருக்கு (மனுதாரருக்கு) வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையயில் அரசாணை எண்.(D)298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.02.09.2020ன்படி கோவிட்–19 முழுஊரடங்கு கால அளவாக 01.04.2020 முதல் 31.05.2020 வரை அரசால் கருதப்பட்டு குத்தகை தொகை செலுத்துவதிலிருந்து தள்ளுபடி செய்ய உத்தரவிடப்பட்டது.

மேலும் மேற்கண்ட குத்தகைதாரர் 2020–21ம் ஆண்டுக்கு இந்த குத்தகை இனத்திற்காக செலுத்தப்பட்ட ஏல டெபாசிட் தொகை ரூ.300000/–லிருந்து இவ்வலுவலக பற்றுச் சீட்டு எண்.141/001/2/2021/0008388 நாள்.06.01.2021ன்படி ஈடு செய்யப்பட்டது.

மேலும் மேற்கண்ட அரசாணையின்படி 2020–21ம் ஆண்டுக்கான முழுக்குத்தகை தொகை ரூ.271436/–லிருந்து இரண்டு மாதங்களுக்கான குத்தகை தொகை ரூ.45240/– தள்ளுபடி செய்யப்பட்டது.

மேலும் மேற்கண்ட நீதிப்பேராணையில் 01.04.2020 முதல் 31.08.2021 வரைக்கான காலத்திற்கு இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதால் அரசாணையின்படி 01.04.2020 முதல் 31.05.2021 வரைக்கான காலத்திற்கு மட்டும் குத்தகை தொகை தள்ளுபடி செய்யப்பட்டதால் மீதம் உள்ள 01.06.2020 முதல் 31.08.2021 வரைக்கான மூன்று மாதகாலத்திற்குரிய குத்தகை தொகை ரூ.67860/–ஐ திரு.K.M.முகைதீன் பிச்சை என்பவருக்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக. மேலும் மேற்கண்ட தீர்ப்பின் மீது அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.ராஜாராஜன் அவர்களிடம் சட்ட கருத்துரு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 681/ 2021/அ3)**

**தீர்மான எண். 531**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகள் 31.03.2021 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது.

| கடை எண் | பெயர் / முகவரி | புதுப்பித்தல் கட்டணம் செலுத்திய விபரம் |
|---|---|---|
| 1. | திரு.எஸ். திருமலைச்சாமி,<br>6சி/45ஏ3 இந்திரா நகர் 2ம் தெரு,<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | ரசீது எண். 10491 ரூ.1000/–<br>18.03.21<br>I Package முடிவு |
| தென்பக்க கடை –2 | தாமரை பேன்ஸி ஸ்டோர்,<br>பேருந்து நிலையம்,<br>கடையநல்லூர் | ரசீது எண். 416 ரூ.1000/–<br>22.04.21<br>IInd Package முடிவு |
| தென்பக்க கடை எண்.1 | திருமதி.குலசேகரத்தம்மாள்,<br>க/பெ.லேட் வேலாயுதம்,<br>16இ/5 திலகர் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரசீது எண். 3029 ரூ.1000/–<br>16.07.21<br>II nd Package முடிவு |

மேலும் மேற்கண்ட கடைகளின் உரிமத்தினை 01.04.2021 முதல் 31.03.2024 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து தரக்கோரி சம்மந்தப்பட்ட கடையின் உரிமதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து உரிய புதுப்பித்தல் கட்டணமும் செலுத்தியுள்ளார்கள்.

எனவே 01.04.2021 முதல் 31.03.2024 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3344/ 2014/அ3)**

**தீர்மான எண். 532**

அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 267 நாள்.31.10.2019 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 1399 /2013/அ3 நாள்.01.11.2019ன்படி இங்கராட்சி வாரச்சந்தையிலுள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கு 31.03.2021 உடன் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

| கடை எண் | பெயர் மற்றும் முகவரி | தற்போதுள்ள வாடகை |
|---|---|---|
| 21 | திரு. சுடலைமுத்து<br>த/பெ. பரமசிவன்<br>பிள்ளையார் கோவில் தெரு,<br>புன்னையாபுரம், கடையநல்லூர். | ரூ.1065/– |
| 22 | திரு.எஸ். முத்துப்பாண்டி,<br>த/பெ சொக்கையா தாஸ்,<br>கே.எம்.அச்சம் பட்டி,<br>அரிய நாயகிபுரம்,<br>சங்கரன்கோவில் தாலுகா, | ரூ.1064/ |
| 23 | திரு.T. வெள்ளைத்துரை,<br>த/பெ. தூசிமாடன்<br>K.M.அச்சம்பட்டி<br>அரிய நாயகிபுரம் (PO)<br>சங்கரன்கோவில்(TK) | ரூ.1063/ |
| 24 | திரு.சு. பூதத்தார்<br>த/பெ. சுப்பையா<br>167/43–53 செவல் விளைத் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.1059/ |
| 25 | திரு.சு.முருகையா<br>த/பெ. சுப்பையா<br>43R/64 செவல் விளைத் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.1059/ |
| 33 | திரு.S. முருகன்<br>த/பெ. சுப்பையா<br>50/ 140 கோபால கிருஷ்ணசாமி<br>கோவில் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.1065/– |
| 52 | திரு.S. முருகன்<br>த/பெ. சுப்பையா<br>50/ 140 கோபால கிருஷ்ணசாமி<br>கோவில் தெரு,<br>கிருஷ்ணாபுரம், கடையநல்லூர். | ரூ.1065/– |
| 35 | திரு.எஸ்.மாரியப்பன்,<br>த/பெ.சுப்பையா தேவர்<br>88B, மலம்பாட்டை தெரு,<br>மேலக்கடையநல்லூர். | ரூ.1065/ |
| 43 | திரு.என்.பாபுராஜ்,<br>83, மறுகால் ஓடை தெரு,<br>கிருஷ்ணாபுரம்.<br>கடையநல்லூர் | ரூ.1060/– |
| 47 | திரு.M.M. முகம்மது அப்பா<br>25/ 23B பேட்டை பெண்கள்<br>பள்ளிக்கூடம் தென்வடல் தெரு,<br>கடையநல்லூர். | ரூ.1060/ |

| | | |
|---|---|---|
| 48 | திரு.M.M. முகம்மது அப்பா 25/ 23B பேட்டை பெண்கள் பள்ளிக்கூடம் தென்வடல் தெரு, கடையநல்லூர். | ரூ.1058/ |

மேற்கண்ட கடைகளின் உரிமம் 31.03.2021உடன் முடிவடைவதால் தற்போதுள்ள வாடகையில் 15 சதவீதம் உயர்வு செய்து 01.04.2021 முதல் 31.03.2024 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு புதுப்பித்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1399/2013/அ3)**

**தீர்மான எண். 533**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க கீழ்க்கண்ட குத்தகை இனங்களின் உரிமங்கள் 31.03.2021 உடன் முடிவடைவதால் 2021–2024ம் ஆண்டுக்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகள் அனுப்விக்கும் உரிமத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ல் அனுமதி வழகப்பட்டுள்ளதின்படி தொடர்ந்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1) பேரறிஞர் அண்ணா தினசரி சந்தை மற்றும் தந்தை பெரியார் வாரச்சந்தையிலுள்ள காலியிடத்தில் தினந்தோறும் வியாபாரம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

2) பேருந்து நிலையத்திற்கு வந்து நின்று செல்லும் பேருந்துகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3) தலைமை நீரேற்று நிலையம், இடைநிலை நீருந்து நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் நிற்கும் தென்னை மரகளின் மேல் மகசூல் உரிமம்.
4) இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள தரைத்தளம் கடை எண்.1
5) இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள முதல் தளம் கடை எண். 13, 15 மற்றும் 16.
6) இந்நகராட்சி வாரச்சந்தையிலுள்ள கடை எண்.34 மற்றும் 46.
7) இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள வடக்கு பக்கம் கடை எண்.1

மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனகளுக்கு 02.02.2021, 12.02.2021, 23.02.2021, 18.06.2021, 19.07.2021 மற்றும் 27.07.2021ம் தேதிகளில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில் மேற்கண்ட குத்தகை இனங்களை யாரும் ஏலம் எடுக்கவும் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் முன்வரவில்லை. எனவே செய்தி மக்கள் தொடர்புதுறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தென்காசி வழியாக ஏழாவது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான உத்தேச செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு மேலும் வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள இனத்திற்கு ஏல டெபாசிட் தொகை ரூ.900000/– என்பது கூடுதலாக இருப்பதால் யாரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை, எனவே ஏல டெபாசிட் ரூ.600000/– ஆக குறைவு செய்யவும் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள இனத்திற்கு ஏல டெபாசிட் தொகை ரூ.300000/– என்பதை ரூ.200000/– ஆக குறைவு செய்து ஏல நடவடிக்கை மேற்காண்டதற்கும், மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4959/ 2020/அ3)**

**தீர்மான எண். 534**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பேருந்து நிலையத்திலுள்ள கீழ்க்கண்ட கடைகளுக்கு குத்தகைக்குவிடப்பட்டு 31.03.2021 உடன் 9 ஆண்டுகள் முடிவடைகிறது.

| கடை எண் | பெயர் மற்றும் முகவரி | நகர் மன்ற தீர்மான எண்/நாள் | தற்போதுள்ள வாடகை தொகை |
|---|---|---|---|
| 10 | திரு.சு.பரமபூல் துரை, S/o சுப்பையாதேவர், 16பி தெற்கு ரத வீதி மேலக்கடையநல்லூர், கடையநல்லூர். | 119/27.04.2012 | 1949/– |

| | | | |
|---|---|---|---|
| 11 | திரு.ஜெயமாலன்,<br>S/o சுப்பையாதேவர்,<br>தெற்கு ரத வீதி<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | 56/ 25.02.2013 | 2053/– |
| 14 | திரு.ஜெயமாலன்,<br>S/o சுப்பையாதேவர்,<br>16பி தெற்கு ரத வீதி<br>மேலக்கடையநல்லூர்,<br>கடையநல்லூர். | 57 /25.02.2013 | 2024/– |

மேற்கண்ட கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.28.04.2021ன்படி கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு அறிக்கை கோரப்பட்டது.

| வ எண் | பெயர் | பதவி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | திரு. காஜா முகைதீன் | நகரமைப்பு அலுவலர் | குழுத்தலைவர் |
| 2. | திரு.முரளி | இளநிலை பொறியாளர் | துணைத் தலைவர் |
| 3. | திரு.மாரிச்சாமி | துப்புரவு ஆய்வாளர் | துணைத் தலைவர் |
| 4. | திரு.துரைகுமாரசாமி | வருவாய் ஆய்வாளர் | உறுப்பினர் |
| 5. | திரு.மாடசாமி | வருவாய் உதவியாளர் | உறுப்பினர் |
| 6. | திருமதி.தனலெட்சுமி | வருவாய் உதவியாளர் | உறுப்பினர் |

மேற்கண்ட குழுக்கள் மூலமாக இந்நகராட்சி பேருந்த நிலையம் அருகிலுள்ள தனியார் கடைகளுக்கு வாடகை எவ்வளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என அறிக்கை கோரப்பட்டது. அதன்படி மேற்கண்ட குழுக்கள் இந்நகராட்சி அருகிலுள்ள தனியார் கடைகளில் (முதல் தளத்திலுள்ள) மாத வாடகை ரூ.1300/– முதல் ரூ.1500/– வரை வாடகையாக வசூல் செய்யப்பட்டு வருகிறது என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்வது தொடர்பாக இவ்வலுவலக கடித எண்.5640/2016/அ3 நாள்.15.06.2021ன்படி சார் பதிவாளர், கடையநல்லூர் அலுவலகத்திற்கு தற்போதைய வழிகாட்டி மதிப்பு (Guideline Value) கோரி கடிதம் அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து வரப்பெற்ற சார்பதிவாளர், கடையநல்லூர் அலுவலக ந.க.எண்.92/2021 நாள்.18.06.2021ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட பேருந்து நிலையப் பகுதியில் ச.மீ–1க்கு ரூ.5175/– வழிகாட்டி மதிப்பாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட கடைகளுக்கு சார்பதிவாளர் அலுவலக வழிகாட்டி மதிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவின் அறிக்கையினை ஒப்பிடுகையில் வழிகாட்டி மதிப்பு ச.மீ 1க்கு 5175/–ஆக உள்ளது. மேலும் தற்போது மேற்கண்ட கடைகளில் வசூல் செய்யப்பட்டு வரும் வாடகையினைவிடவும் கண்காணிப்பு குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் வாடகை விபரம் குறைவாக உள்ளது. எனவே தற்போது மேற்கண்ட கடைகளுக்கு வசூல் செய்யப்பட்டு வரும் வாடகைத் தொகையில் 15% க்கும் குறையாமல் வாடகை மறு நிர்ணயம் செய்து 01.04.2021 முதல் 31.03.2024 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்து உத்தரவு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1399/2013/அ3)**

**தீர்மான எண். 535**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.10**

கடையநல்லூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக **30.06.2021**ல் ஓய்வு பெற்றுள்ள திரு.செல்லப்பா துப்புரவு பணியாளர் எண்.**66** என்பவரின் சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.**2960/–** அதற்கான வட்டித் தொகை ரூ.**9123/–** மற்றும் அரசின் பங்களிப்புத் தொகை ரூ.**10,000/–** ஆக மொத்தம் ரூ.**22083/–**யை வழங்க இசைவு வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2176/2021/D1)**

**தீர்மான எண். 536**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

2021–2022 ம் ஆண்டில் கடையநல்லூா் நகராட்சி பராமரிப்பிலுள்ள அம்மா உணவகத்தில் பணியாற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினா்களுக்கு ஊதியம் வழங்குவது மற்றும் அம்மா உணவகத்திற்கு தேவையான கீழ்கண்ட சமையல் பொருட்கள் விநியோகம் செய்வது தொடா்பாக மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | மல்லி சுயஉதவிக்குழு | ஊதியம் |
| 2 | நியூ சாரால் சுயஉதவிக்குழு | |
| 3 | 0.1114 கடையநல்லூா் கூட்டுறவு சொசைட்டி | பலசரக்கு விநியோம் |
| 4 | திரு.ஜி.கண்ணன் | பால்விநியோகம் |
| 5 | திரு.எம்.முப்புடாதி | காய்கறி விநியோகம் |
| 6 | ஸ்ரீசாய்ராம் பாரத் கேஸ் | எரிவாயு உருளை விநியோகம் |
| 7 | அரசி விநியோகம் | கண்காணிப்பாளா், தமிழ்நாடு நுகா்பொருள் வாணிபக் கழகம், தென்காசி |

மேலும் 01.01.2021முதல் 31.12.2022 வரையிலான உத்சேத செலவினத் தொகை ரூ.30,00,000/– லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2360/2015/சி1)**

**தீா்மான எண். 537**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.12**

கடையநல்லூா் நகராட்சியில் பணிபுரிந்து வரும் மாற்றுத்திறனாளி பணியாளா்களுக்கு அரசாணை எண்.307 நிதி (ஊதியப்பிரிவு) துறை நாள்.13.10.2017ன்படி போக்குவரத்துப்படியாக ரூ.2500/– வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.களண்.1435/2021/சி1)**

**தீா்மான எண். 538**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் டிராக்டா் வாகனம் .TN72U 2038 வாகனத்தின் இஞ்சின் கம்ளீட் ஓவராலிங் சா்வீஸ் செய்ய மன்றத்தின் பின்னேற்பினை எதிா்நோக்கி தனி அலுவலா் அவா்கள் 13.07.2021 அன்று அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 20.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | விலைப்புள்ளி கொடுத்தவா்கள் விபரம் | முன் வைப்பு தொகை செலுத்திய விபரம் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | Moosa Engineering Works, 194, Shengottai road, Tenkasi. | முன் வைப்புத்தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது | ரூ.29,800/– |
| 2. | Sri.Muruga Motor works. 3-514. Tenkasi. Shengottai Main Road, Kottakulam | முன் வைப்புத்தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது | ரூ.32500/– |
| 3. | Natarajan Motor Works, 1A, Old Bus stand Road, Tenkasi. | – | ரூ.33200/– |

மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் ரூ.29800/– கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இஞ்சினியரிங் ஓா்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி என்பவரின் ஒப்பந்தபுள்ளியினை ஒப்புக் கொண்டு மேற்படி வாகனத்தின் இஞ்சின் கம்ளீட் ஓவராலிங் சா்வீஸ் செய்ய அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 2352/ 2021/எச்1)**

**தீா்மான எண். 539**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.14**

கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் –2016, திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016ன்படி வணிக நிறுவனங்களுக்கு அதில் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை நகராட்சி மூலம் அப்புறப்படுத்த நிர்வாக கட்டணம் (User Fee) நிர்ணயம் செய்து நகர்மன்ற தீர்மானம் எண்.206 நாள்.21.06.2017ன்படி மாவட்ட அரசிதழ் எண்.8 நாள்.18.09.2017ன்படி வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதில் சில இனங்களுக்கு குப்பை வரி நிர்ணயம் செய்யப்படவில்லை என்பதினால் எல்லா கடைகளுக்கும் குப்பைவரி நிர்ணயம் செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவே இந்நகராட்சி பகுதிகளில் செயல்படும் பட்டியலில் குறிப்பிடப்படாத கீழ்க்கண்ட இனங்களுக்கு 2021–22 ஆம் ஆண்டு முதல் கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி குப்பைவரி நிர்ணயம் செய்து வசூல் செய்திடும் வகையில் அதனை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவினங்களுக்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

| வ.எண். | விபரம் | தொகை மாதம் ஒன்றிற்கு ரூ |
|---|---|---|
| 1. | அனைத்து வகையான குடோன்கள் | 40 |
| 2. | தச்சுவேலை | 20 |
| 3. | எலக்ட்ரிக் கடை மற்றும் சர்விஸ் சென்டர் | 30 |
| 4. | லேத் | 20 |
| 5. | பெட்ரோல் பல்க் | 20 |
| 6. | கன்சல்டி ஷாப் (அனைத்து வகையான வாகனம்) | 20 |
| 7. | மொபைல் ஷாப் | 10 |
| 8. | ஹோம் அப்ளையன்ஸஸ் | 30 |
| 9. | டைல்ஸ் கடை | 50 |
| 10. | பென்ஸி ஸ்டோர் | 10 |
| 11. | துணிக்கடை | 20 |
| 12. | செருப்புக்கடை | 20 |
| 13. | பட்டியலில் குறிப்பிடப்படாத அனைத்து இனங்கள் | 20 |

**(ந.க.எண். 3414/ 2021/எச்1)**

**தீர்மான எண். 540**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

இந்நகராட்சி இடைநிலை நீருந்து நிலையத்தில் (Booster station) புதிதாக பொருத்தப்பட்ட மோட்டார் மற்றும் பம்பில் உள்ள Delivery Pipe Line –ல் உள்ள Non Return Valve 150 MM CI Slivce Valve புதிதாக மாற்றம் செய்யவும், தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக பொருத்தப்பட்டுள்ள 45.00 HP SUB Motor-க்கு 35.00 சதுரமீட்டர் COPPER CABLE கூடுதலாக 40 மீட்டர் அமைக்கவும் மற்றும் Water Level Indicator புதிதாக பொருத்தும் ஆகிய பணிகளை ரூ.1,27,000/– உத்தேச மதிப்பீட்டில் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தகுதிப்பெற்ற நிறுவனங்கள் / ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்க்கொள்ள 29.03.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | Alchem Industries,<br>32–A, Ooty Road,<br>Mettupalayam-641301,<br>Coimbatore.Dist. | ரூ.1,27,000/– |
| 2 | Sree Power Engineers,<br>109, Duraisamy Naidu Layout,<br>Peelamedu,<br>32–A, Ooty Road,<br>Coimbatore-641004. | ரூ.133,000/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள Alchem Industries, 32–A, Ooty Road, Mettupalayam, என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மேற்காணும் பணிகளை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவினத் தொகையினையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1066/2021/இ1)**

**தீர்மான எண். 541**

பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.16**

இந்நகராட்சி வார்டு எண் 15ல் பரசுராமபுரம் வடக்கு தெரு கிழக்கு பகுதிக்கு குடிநீர் விநியோகம் சீராக கிடைத்திட பஜார் ரோடு ஹிதாயத்துல் இஸ்லாம் மேல்நிலைப்பள்ளி வடபுறம் உள்ள தென்வடல் சந்து வழியாக 90 மீட்டர் நீளத்திற்கு பைப்லைன் பதித்து வால்வு அமைத்து பரசுராமபுரம் வடக்கு தெருவுடன் இணைப்பு செய்யும் பணியினை ரூ.1,30,000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் 15.06.2021 அன்று தகுதிப்பெற்ற ஒப்பந்க்காரர்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.1,25,269/– |
| 2 | திரு. P.M.அசன் முகம்மது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.1,27,802/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மேற்காணும் பணிகளை **மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1034/2021/இ1)**

**தீர்மான எண். 542**

பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

இந்நகராட்சி வார்டு எண்.7 வானுவர் பிள்ளையார் கோவில் தெரு மற்றும் வார்டு எண்.4 சந்தனமாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சிறுபாலங்களை சரிசெய்யும் பணியினை ரூ.42,500/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் 15.06.2021 அன்று தகுதிப்பெற்ற ஒப்பந்க்காரர்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.42,248/– |
| 2 | திரு. P.M.அசன் முகம்மது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.42,731/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மேற்காணும் பணிகளை **மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1034/2021/இ1)**

**தீர்மான எண். 543**

பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

இந்நகராட்சி வார்டு எண்.01 குமந்தாபுரம், வார்டு எண்.05 கிருஷ்ணாபுரம் பார்க் மற்றும் வார்டு எண்.09 முத்துகிருஷ்ணாபுரம் (செக்கடி) ஆகிய மேல்நிலைத்தொட்டிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் உள்ள வால்வுகளை மாற்றி புதிதாக தரமான வால்வுகளை வாங்கி பொருத்தும் பணியினை ரூ.1,45,000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் .05.2021 அன்று தகுதிப்பெற்ற ஒப்பந்க்காரர்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.1,43,552/– |
| 2 | திரு. P.M.அசன் முகம்மது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | ரூ.1,45,520/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மேற்காணும் பணிகளை **மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1735/2021/இ1)**

**தீர்மான எண். 544**

பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

இந்நகராட்சி பகுதிகளில் முதல் நிலை சேகரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 17 எண்ணம் Battery Operate Vechile வாகனங்களில் உள்ள மின்கலங்கள் (Battery) மற்றும் 15 எண்ணம் மின்னூட்டல்கள் (Charger) வாங்கி பொருத்தும் பணியினை ரூ.747000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மேற்கொள்ள **மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் அனுமதி** வழங்கியுள்ளதன் அடிப்படையில் 23.07.2021 அன்று தகுதிப்பெற்ற நிறுவனங்கள்/ஒப்பந்தக்காரர்களிடம் விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | EXIDE BATTERY 12V 1NOS | EXIDE BATTERY CHARGES 1NOS | FITTING CHARGES 1NOS |
|---|---|---|---|---|
| 1. | SHARP SYSTEMS, COIMBATORE. | RS.7400/- | RS.5800/- | RS.1770/- |
| 2. | SELVARAM ENTER PRISES, TIRUPUR. | RS.7900/- | RS.6300/- | RS.2000/- |
| 3. | IVA ASSOCIATIES, COIMBATORE | RS.8300/- | RS.6700/- | RS.2200/- |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள SHARP SYSTEMS,COIMBATORE என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு இந்நகராட்சி பகுதிகளில் முதல் நிலை சேகரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 17 எண்ணம் Battery Operate Vechile வாகனங்களில் உள்ள மின்கலங்கள் (Battery) மற்றும் 15 எண்ணம் மின்னூட்டல்கள் (Charger) வாங்கி பொருத்தும் பணியினை **மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ்** அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகைக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3403/2021/இ1)**

**தீர்மான எண். 545**

பதிவு செய்து அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாராக பதிவு செய்து பணிகள் எடுத்து செய்து வந்த திரு. S.சேக் உதுமான் கக்கீம் ஒப்பந்தகாரார் என்பவர் 2014–2015 மற்றும் 2015–2016ம் ஆண்டில் வருவாய் மற்றும் குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் எடுத்து செய்த கீழ்காணும் பணிகள் முடிவு பெற்று ஒரு வருடத்திற்கு மேல் ஆன நிலையில் நல்ல நிலையில் உள்ளதால் அப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகைகள் திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

| வ. எண் | பணியின் விபரம் | 5 % நிறுத்தி வைக்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| 1. | கடையநல்லூர் நகராட்சி – கிருஷ்ணாபுரம் தலைமை நீரேற்று நிலையத்தில் காவலர் அறை அமைத்தல் பணி | 25000/– |
| 2. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.22ல் கழிப்பறை பழுதுபார்த்தல் பணி | 11250/– |
| 3. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.31 நத்தகர் பள்ளிவாசல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 49000/– |
| 4. | கடையநல்லூர் நகராட்சி– வார்டு எண்.31 நத்தடு பள்ளிவாசல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண்.31 காதர்மைதீன் பள்ளிவாசல் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் பணி | 49000/– |
| 5. | கடையநல்லூர் நகராட்சி –வார்டு எண்.23 கிருஷ்ணன் கோவில் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 90000/– |
| 6. | கடையநல்லூர் நகராட்சி – போகநல்லூர் உரக்கிடங்கில் குப்பைகள் அகற்றும் பணி | 10000/– |
| | மொத்தம் | 234250/– |

மேற்காணும் விபரப்படி வரிசை எண். 1 முதல் 6 வரையுள்ள பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்ட 5% கூடுதல் வைப்புத்தொகை ரூ. 234250/– யை இதுநாள் வரை மேற்காணும் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாத காரணத்தினால் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டிற்கு எடுத்து செய்யப்பட்டு விட்டது. ஆகவே மேற்காணும் தொகை ரூ.234250/–யை திரு. S.சேக் உதுமான் கக்கீம் ஒப்பந்தக்காரருக்கு வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண். 1645/2021/இ1)**

**தீர்மான எண். 546**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.21**

கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கு வளாகத்தில் 40KLD அளவிலான கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வரும் நிலையில் உள்ளது. இந்நிலையத்தில் பணிகளை தொய்வில்லாமல் மின்தடை ஏற்படும் சமயங்களில் தொடர்ந்து நடைபெற **"Solar Power"** சூரிய ஒளி மின்சார வசதிகள் செய்யுமாறு நகராட்சி மண்டல பொறியாளர் திருநெல்வேலி அவர்களது அறிவுரையின் பேரில் அமைக்கப்பட வேண்டியுள்ளது. ஆகவே, திட்ட

பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு கசடு மற்றும் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தில் புதியதாக **Solar Power** அமைக்கும் பணிக்காகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.380000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க. எண். 2331/2021/இ1)**

**தீர்மான எண். 547**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.22**

கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கு வளாகத்தில் 40KLD அளவிலான கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டி முடிக்கப்பட்ட பணிகளில் இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் கட்டிட பணிகளுக்கு வர்ணம் பூசும் பணிகள் செய்யப்பட வேண்டியுள்ளது. ஆகவே, திட்டப்பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வர்ணம் பூசும் பணிகளை மேற்கொள்ளவும் இதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.975000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க. எண். 2331/2021/இ1)**

**தீர்மான எண். 548**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.23**

கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கு வளாகத்தில் 40KLD அளவில் கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியில் இறுதி கட்ட பணிகள் நடைபெற்றும் வரும் நிலையில் உள்ளது. இதில் Sludge Drying Bed 1 மற்றும் Sludge Drying Bed 2 தன்தளம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சரிகை உள்ளதால் சுற்றுச்சுவர்களை உயர்த்த வேண்டியுள்ளது. ஆகவே, திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு ரூ.**886000/–** உத்தேச மதிப்பீட்டில் கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Sludge Drying Bed 1 மற்றும் 2ல் உள்ள சுற்றுச் சுவரினை உயர்த்தி கட்டும் பணிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க. எண். 2331/2021/இ1)**

**தீர்மான எண். 549**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.24**

கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கு வளாகத்தில் 40KLD அளவில் கசடு மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகளில் இறுதி கட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் Screening Champers, Sludge Screening Bed, Sludge Drying Bed, Collection Tank, Collection Tank-1, ISAF, ISAF-PGF, PGF-Polishing Pond மற்றும் Polishing Pond-லிருந்து Collection Tank-2க்கு Internal Plumping பணிகள் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டும் மேற்காணும் கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Internal Plumbing பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.840000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காகவும் வைக்கப்படுகிறது.

**(ந.க. எண். 2331/2021/இ1)**

**தீர்மான எண். 550**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.25**

கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கு வளாகத்தில் 40KLD அளவில் கசடு மற்றும் கழிவுநீர் மேலாண்மை சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியில் இறுதி கட்ட பணிகள் நடைபெற்றும் வரும் நிலையில் உள்ளது. இதில் Sludge Drying Bed 3 மற்றும் Sludge Drying Bed 4 தன்தளம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சரிகை உள்ளதால் சுற்றுச்சுவர்களை உயர்த்த வேண்டியுள்ளது. ஆகவே, திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு போகநல்லூர் உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள கசடு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள Sludge Drying Bed 3 மற்றும் 4ல் உள்ள சுற்றுச் சுவரினை உயர்த்தி கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.890000/-க்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவீனத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காகவும் வைக்கப்படுகிறது.

**(ந.க. எண். 2331/2021/இ1)**

**தீர்மான எண். 551**

அனுமதிக்கப்பட்டது.

**(ஓம்)S.ரவிச்சந்திரன்,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**